(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 102.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 சனவரி 10 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ எச். நந்தசேன

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சமிந்த விஜேசிறி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும் கடிதத்தை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு கையளித்துள்ளார் என்பதனை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அக் கடிதம் தற்பொழுது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களால் வாசிக்கப்படும்:—

පාර්ලිමේන්තුව
*பாராளுமன்றம்*
**PARLIAMENT**

මහලේකම් තුමිය,
ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව,
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ,
කෝට්ට,

පාර්ලිමේන්තු මන්ත්‍රී ධුරයෙන් ඉල්ලා අස්වීම දැන්වා සිටීම සම්බන්ධවයි.

9 වන පාර්ලිමේන්තුවේ මාගේ මන්ත්‍රීධුරයෙන් අද දින [2024.01.09] ඉල්ලා අස්වන බව දන්වා සිටිමි. යහපත් 225 නිර්මාණය කිරීමට ඔබතුමියට ශක්තිය ධෛර්ය ලැබේවායි ප්‍රාර්ථනා කරමි.

Deshabandu [illegible] Chaminda Wijesiri
Member of Parliament - Badulla District
North [illegible], Bandarawela.

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ, 41இ, 41ஈ மற்றும் 41உ ஆகிய உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 41எ என்னும் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் கீழ் அரசியலமைப்புப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய 2364/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 120 (4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்கினையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கல்வி நிறுவகத்தின் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மற்றும் முதுகலை பயிற்சி மையத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன சார்பாக குழுவின் உறுப்பினர் கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம்;

(ii) அற்றோணித் தத்துவ (திருத்தச்) சட்டமூலம்; மற்றும்

(iii) மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஜகத் குமார சுமித்தராரச்சி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் – செலவுத் தலைப்பு இல. 04 இன் செயலாற்றுகை அறிக்கை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஜகத் குமார சுமித்தராரச்சி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2022 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகை மற்றும் நிதி அறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ நாலக பண்டார கோட்டேகொட "2024 சனவரி மாதத்தில் மின் கட்டணத்தைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) ஹொரண, தொம்பகொட, கெதிகானவில எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ்.எம்.வி. தில்காவினது 2023.09.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அநுர திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(2) களுத்துறை, வஸ்கடுவ, பனாபிட்டிய, மானன்தூவ வீதி, 'பிரசாத்' எனும் முகவரியில் வதியும் திருமதி எச்.எஸ்.ஆர். பொன்சேக்காவினது 2023.09.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜயந்த சமரவீர சமர்ப்பித்தார்.

(3) பதுளை, வினீதகம, கல்பொத்தாவல எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஏ. தயானந்தவினது 2023.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அசங்க நவரத்ன சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பயங்கரவாத எதிர்ப்பு:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — பயங்கரவாதச் செயல்களிலிருந்தும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாகவமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசியப் பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கை ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும்; பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறேதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங் காண்பதற்காகவும், பற்றுவதற்காகவும், கைது செய்வதற்காகவும், தடுத்து வைப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 சனவரி 24 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 7 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரை களையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட

வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2023 யூன் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால், குறிப்பிட்ட விசேட குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையானது பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2024 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யபடுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் :** விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2023 நவம்பர் 08).

ஒத்திவைப்பு விவாதத்தைத் தொடருவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப.11.53 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமைதாங்குவாராக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.20 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்குவாராக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.09 மணிக்கு கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக” என கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண பிரேரிரக்க அதனை கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.10 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.22 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 1 ஆம் மற்றும் 2 ஆம் வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "அல்லது அதற்குப் பாரதூரமான பங்கம் விளைவித்தல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(இ) பொய்யான ஏதேனும் விடயத்தைப் பற்றி";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 17 ஆம் மற்றும் 18 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "உரிய நெறியைப் பாரதூரமானமுறையில் பங்கப்படுத்துவது அல்லது அதனோடு சட்டமுறையற்றவகையில் தலையிடுவது;அல்லது" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(iv) நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் ஒரு வழக்குநடவடிக்கையின் ஏதேனும் கட்புல அல்லது செவிப்புல அல்லது இரண்டினதும் பதிவுடன் கையிடுகின்றமை, அதனை மாற்றுகின்றமை, அல்லது பொய்யாக்குகின்றமை ; அல்லது" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 7 முதல் 10 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஒரு நீதிபதியின் அல்லது நீதிமுறை அலுவலரின் அல்லது, வழக்குநடவடிக்கையின், தீர்ப்பின் அல்லது நீதிமன்றக் கட்டளையின் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செம்மையான நிகழ்வுகள் பற்றிய ஏதேனும் வெளியீடு அல்லது கருத்துத் தெரிவிப்பு, அத்தகைய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நீதிபதிக்கு அல்லது நீதிமுறை அலுவலருக்கு அல்லது, வழக்குநடவடிக்கைக்கு, தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு ஏதேனும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 20 ஆம் மற்றும் 21 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அல்லது வழக்கு நடவடிக்கைகளின் செம்மையான நிகழ்வுகள் பற்றிய; அல்லது" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"தீர்ப்பின் அல்லது நீதிமன்றக் கட்டளையின் அல்லது வழக்கின் அல்லது விண்ணப்பத்தின் திறன்கள்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் மற்றும் 6 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

7 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 16 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கொடுத்து அவருக்கு நீதிமன்றப் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட கட்டளைவிதியொன்று வழங்கப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு எதிர்வாதத்தில் சத்தியக்கடுதாசியொன்றைக் கொடுத்துதவுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னரும் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைக்";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 5 முதல் 15 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், வாய்மொழிமூலமாகவாயினுஞ்சரி அல்லது எழுத்திலாயினுஞ்சரி , நீதிமன்ற அவமதிப்பு எந்த நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் சமுகத்தில் அல்லது அவருக்கு அல்லது அவர்களுக்குக் கேட்கும்வகையில் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்த நீதிபதி அல்லது நீதிபதிகள் அல்லாத வேறு நீதிபதியினால் அல்லது நீதிபதிகளினால் அவருக்கெதிரான குற்றச்சாட்டு விளங்கப்படவேண்டுமென விண்ணப்பிக்குமிடத்து, அக்குற்றச்சாட்டின் விளக்கம் தொடர்பில் வழங்குவதற்குத் தகுதியானதென விடயத்துக்கேற்ப பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்காக, விடயத்தின் நிகழ்வுகள்பற்றிய ஒரு கூற்றுடன் சேர்த்து, விடயத்துக்கேற்ப பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் முன்னர் அவ்விடயம் இடப்படுவதனை நீதிமன்றம் செய்வித்தல் வேண்டும்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 16 முதல் 24 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 7 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “விடயத்திற்கேற்ப பிரதம நீதியரசர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் முன்னர் இடப்பட்ட நிகழ்வுகள் பற்றிய கூற்று”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 21 முதல் 30 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “(7) விடயத்துக்கேற்ப, உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், இப்பிரிவின்கீழான குற்றச்சாட்டொன்று தீர்மானிக்கப்படும் வரை, அத்தகைய நீதிமன்றம் விதிப்பதற்குத் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய ஆள் பிணையில் விடப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 4 முதல் 13 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) பிரேரணைக்கு ஆதாரமான ஏதேனும் ஆவணத்துடன் அல்லது பொருளுடன் சேர்த்து சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கோப்பிடப்பட்டவொரு பிரேரணையின் மீது; அல்லது

(இ) பிரேரணைக்கு ஆதாரமான ஒரு சத்தியக்கடுதாசியுடனும் ஏதேனும் ஆணவத்துடனும் அல்லது பொருளுடனும் சேர்த்து வேறெவரேனும் ஆளினால் கோப்பிடப்பட்டவொரு பிரேரணையின்மீது,

அதன் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகையில் புரியப்பட்டவொரு நீதிமன்ற அவமதிப்புத்தவிர, அதற்கெதிராக அல்லது அதன் அதிகாரத்துக்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட நீதிமன்ற அவமதிப்பொன்றைக் கவனத்துட் கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரேரணையும் அல்லது சத்தியக்கடுதாசியும், நீதிமன்ற அவமதிப்பைப் புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆளினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட நீதிமன்ற அவமதிப்பின் விபரங்களை எடுத்துக்கூறுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 18 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பிரேரணையும் சத்தியக் கடதாசியையும், ஆவணத்தையும் அல்லது பொருளையும் நுனித்தாராய்ந்த பின்வரும், நீதிமன்ற அவமதிப்பைப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆளுக்கு நீதிமன்றப் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட கட்டளைவிதியொன்று வழங்கப்படுவதனைச்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கோப்பிடப்படட ஆவணத்தின் பிரதியொன்றுடன்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியினை உடனடுத்துப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(4) குற்றச்சாட்டின் கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, சட்டத்துறைத் தலைமையதிபதி, நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆளைக் குறுக்கு விசாரணைசெய்வதற்கான உரிமைக்கமைய, அவசியமாயின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஆவணத்துக்கு இயைபான அத்தகைய சாட்சியின் சான்றை நெறிப்படுத்தலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம்

13 ஆம் பக்கத்தில் 9 முதல் 14 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கோப்பிடப்பட்டவொரு பிரேரணைக்கு ஆதாரமான ஏதேனும் ஆவணத்துடன் அல்லது பொருளுடன் சேர்த்து அப்பிரேரணையின்மீது; அல்லது

(இ) பிரேரணைக்கு ஆதாரமான ஒரு சத்தியக்கடுதாசியுடனும் ஏதேனும் ஆவணத்துடனும் அல்லது பொருளுடனும் சேர்த்து வேறெரேனும் ஆளினால் கோப்பிடப்பட்ட ஒரு பிரேரணையின்மீது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு குறிப்பீடும் அல்லது கோப்பிடப்பட்ட பிரேரணையும் அல்லது சத்தியக்கடுதாசியும், விடயத்துக்கேற்ப,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பிரேரணையை அல்லது சத்தியக் கடதாசியை நுனித்தாராய்ந்த பின்னரும், ஒரு நீதிமன்றம்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆளுக்குப் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்ட கட்டளைவிதியொன்று வழங்கப்படுவதனைச்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பிரேரணையின் மற்றும் ஆவணத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து அத்தகைய";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் 8 முதல் 14 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(4) குற்றச்சாட்டின் கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, சட்டத்துறைத் தலைமையதிபதி, அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைக் குறுக்குவிசாரணை செய்வதற்கான உரிமைக்கமைய, அவசியமாயின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஆவணத்துக்கு இயைபான அத்தகைய சாட்சியின் சான்றை நெறிப்படுத்தலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 30 முதல் 35 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் பக்கத்தில் 1 முதல் 31 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் பக்கத்தில் 1 முதல் 22 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

17 ஆம் பக்கத்தில் 23 முதல் 32 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> **"12.** (1) மேன்முறையீட்டு நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, அதற்கான அவமதிப்புக்காக மற்றும் முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்காகத் தண்டிப்பதற்கு அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அதன் ஏதேனும் கட்டளை அல்லது முடிபிலிருந்து உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் பக்கத்தில் 1 முதல் 3 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "பின்வருமாறு கட்டளை";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் பக்கத்தில் 14 முதல் 16 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

19 ஆம் பக்கத்தில் 4 ஆம் மற்றும் 5 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "**13.** (1) அத்தகைய அவமதிப்பானது எத்தேதியன்று அந்த நீதிமன்றத்தின் கவனத்துக்கு விதிமுறைப்பட கொணரப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 11 ஆம் மற்றும் 12 ஆம் வரிகளை நீக்கிவிட்டு நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(2) நியாயசபை அல்லது நிறுவனமொன்று, அத்தகைய அவமதிப்பானது எத்தேதியன்று அந்த நியாயசபையின் அல்லது நிறுவனத்தின் கவனத்துக்கு விதிமுறைப்பட கொணரப்பட்டதோ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் மற்றும் 15 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

16 ஆம் வாசகம்

20 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "வைப்பதற்காகவும் எழுத்திலான சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஒரு";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 ஆம் பக்கத்தில் 15 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> “வைப்பதற்காகவும் எழுத்திலான சட்டத்தினால் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஒரு.”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய வாசகம்

6 ஆம் பக்கத்தில் 6 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“தகவலின் மூலத்தை வெளிவிடாமை

5. ஆளொருவர், நீதி நலனுக்காக அல்லது தேசியப் பாதுகாப்புக்காக அல்லது ஒழுங்கின்மையை அல்லது குற்றங்களைத் தடுப்பதற்காக வெளிவிடுகையானது அவசியமாகவுள்ளதென நீதிமன்றத்தின் திருப்திக்கு நிலைநாட்டப்பட்டாலொழிய, அவர் எந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவலுக்காகப் பொறுப்பாகவுள்ளரோ அந்தத் தகவலின் மூலத்தை -

(அ) நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளின் போது வெளிவிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது; அல்லது

(ஆ) வெளிவிடுவதற்கு மறுக்கின்றமைக்காக நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றவாளியாகக் காணப்படுதலாகாது. ”.

“வாசகம் இரண்டாம் முறை மதிப்பிடப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 17 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**10. மத்தியஸ்த சபை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 8 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின் றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**11. அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 7 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

**12. நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 5 முதல் 14 வரையிலா வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"2.(இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:—

"அத்தகைய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, பின்வரும் விபரங்கள் அடங்கிய, அத்தகைய நொத்தாரிசினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான வெளிப்படுத்துகையொன்று அத்தகைய பிவாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்:—

(அ) அவரது பெயர் மற்றும் வதிவிடம் அல்லது வதிவிடங்கள்;

(ஆ) அவரது அலுவலகத்தன் அல்லது அவரது அலுவலகங்கள் ஒவ்வொன்றினதும் திட்டவட்டமான அமைவிடம்;

(இ) அவர் தொழில்புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நீதிமுறை வலயம்.";

(2) அதன் (1அ) என்னும் உட்பிரிவில் "எனப் பயன்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எனவும் 35ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள பணத்தொகை ஏதேனும் இருப்பின், அவ்வேதேனும் பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளது எனவும் பயன்படும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது" .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

6 ஆம் பக்கத்தில் 2 ஆம் வரியை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இடுவதன்மூலமும்;

(9) அதன் (29) ஆம் விதியில் "படிவம் ஊ இல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிவம் ஊ 1 இல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

அத்துடன்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 9 முதல் 16 வரையிலான வரிகளையும் 9 ஆம் 1 ஆம் வரியையும் நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“புதிய வடிவத்தை உட்புகுத்துவதன் மூலமும்:—

“படிவம் ஊ1 [பிரிவு 31(26)]

உறுதிகளின் மாதாந்த நிரல்

..........ஆம் ஆண்டு ............. மாதத்தின்போது அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகளின் நிரல்

நொத்தாரிசின் பெயர்:

நொத்தரிசின் தே.அ.அ. இல:

இல:

| இல. | உறுதி இல | அத்தாட்சிப்படுத்துகைகத் திகதி | சாததனத்தின பெயர் | அளிப்பவர் | | அளிப்புப் பெறுபவர் | | பதிவு செய்யப்பட்ட மாவட்டம் | காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | காணியின் யெபர் | காணி அமைந்துள்ள உள்ளூரதிகார சபை | பிரதி பயன் | முத்திரைத் தீர்வை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயர் மற்றும் முகவரி | தே. அடையாள அட்டை | பெயர் மற்றும் முகவரி | தே. அடையாள அட்டை | | | | | | மத்திய அரசாங்கம் | மாகாண சபை |

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகள்,”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் மற்றும் 7 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகம்

7 ஆம் பக்கத்தில் 36 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

| | |
|---|---|
| “முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல் | 5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, “ உறுதி முடிப்பவர்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. ”. |

“வாசகம் இரண்டாம் முறை மதிப்பிடப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக” என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**13. மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மிடுவதன்மூலமும்;

(2) அதன் மீள் இலக்கமிட்டபட்ட (1) ஆம் உட்பிரிவில்-

(அ) பந்தி (அ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

(அ) இயைபான உறுதி அல்லது சாதனம் எழுத்திலிருந்தாதொழியவும், அதேநேரத்தில் சமுகமாயிருக்கும் ஓர் உரிமம்பெற்ற பிரசித்த நொத்தாரிசுவினதும் ஒவ்வொருவரினதும் சமுகத்திலும், அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினாலும் சாட்சிகளினாலும் கையொப்பமிடப்பட்டாலொழியவும், அது அத்தகைய நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டாலொழியவும், அத்துடன்";

(ஆ) பந்தி (ஆ) வில், "இயைபான உறுதியில் அல்லது சாதனத்தில் இடப்பட்டிருந்தாலொழியவும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய பிரசித்த நொத்தாரிசுவினதும் சாட்சிகளினதும் சமுகத்தில், இயைபான உறுதியில் அல்லது சாதனத்தில் இடப்பட்டிருந்தாலொழியவும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**14. அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 சனவரி 03 ஆம் திகதிய 2365/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிலும் அதன் அட்டவணையிலும் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. ஒத்திவைப்பு:** அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே பிரதிச் சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2024 சனவரி 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.